1.1 **அபிப்பிராயம்**

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2015 ஏப்ரல் 09 ஆந் திகதிய 914 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் | விரிவுரை பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு இடையே இரட்டிப்பு தொடர்பு (dual relationship with | 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் கல்விப் பொறுப்பு தொடர்பாக | வழிகாட்டல் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழுக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்ட கல்வி பதவியணியின் ஒழுக்கம் மற்றும் கல்விப் பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5 ஆம் பிரிவு | students) வெளிப்படுத்து வதற்கு அல்லது இதன் மூலம் தரக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகளை தவிர்ப்பது தொடர்பாக போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதுடன் இத்தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக நிறுவகத்தினால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று நிறுவப்பட்டு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(II) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 09 பந்தி | ஒவ்வொரு நிறுவகத்தினதும் உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமை குழு கூட்டத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2019.01.01 ஆந் திகதிய 01-2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை மூலம் பல்கலைக் கழகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான பதவியணியினர் இணைக்கப்பட்டதன் பின்னர் முறையாக உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப்பட்டு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென அறி தருகின்றேன். | சுற்றறிக்கை இணங்குவதற்காக கட்டுப்பாட்டு முறைமையொன்று துரிதமாக திட்டமிடப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/IA ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான வரைவாக்கப்பட்ட திட்டம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முகாமைத்துவ குழுக் கூட்டத்திற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரல்'' | சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் போது இனங்காணப்பட்ட வேறுபாடுகள் மீண்டும் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்குமாறு பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிறுவகம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 48,993,216 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,384,639 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 16,608,577 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு உள்ளக வருமான உழைப்பு ரூபா 27,911,368 ஆல் அதிகரித்தமை மற்றும் ஆராய்ச்சி வெளியீட்டு விழா (ஆராய்ச்சி காங்கிரஸ்) செலவினம் ரூபா 668,391 ஆலும் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 04 ஆண்டுகளிலும் மிகைகள் ஏற்பட்டிருந்தன. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொண்டதன் பின்னர் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 45,666,590 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 99,079,806 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| Minan Buddhist College Chaina நிறுவகத்திடமிருந்து மானியமாக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,150,896 தொகை 2018 ஆம் ஆண்டின் போது 2,414,805 மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது 2,433,495 என கிடைத்திருந்த ரூபா 6,999,196 கூட்டுத்தொகை நிறுவகத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்த திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | நிறுவகத்தினால் இப்பணத்தை மாணவர் விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அக்கட்டிட நிர்மாணத்தின் வேலைகள் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. நிறுவகம் மற்றும் இந்து ஸ்ரீ லங்கா மன்றம் என்பன இணைந்து மேற்கொள்ளப்படும் | நிதியத்தினை விரைவில் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்து ஸ்ரீ லங்கா மன்றத்தின் மூலம் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 368,125 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை பன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆராய்ச்சிகளில் 2019 ஆம் ஆண்டில் தரவு சேகரித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. |

**3.2 நிதிய குறைப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 477,157 தொகையான 02 நிதியக் கணக்குகள் ஆண்டின் போது பயன்படுத்தப்படாமல் விளைவற்ற வகையில் பேணப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டில் இந்நிதியத்தை கொடுக்கல் வாங்கல்களுக்காக பயன்படுத்தப்படும். | நிதியத்தை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) Preparation and Planning for Gender Analysis in Economics at UOP கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியிலான ரூபா 756,449 ஆன மீதியொன்று நாட்குறிப்பு பதிவு மூலம் மென்பொருள் கொள்வனவு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதும் குறித்த மென்பொருளை கொள்வனவு செய்ய ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள் கொள்வனவிற்காக ஒதுக்கீடு செய்திருந்த ரூபா 756,449 தொகை பயன்படுத்தப்பட்டு குறித்த மென்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 208,840 பெறுமதியான 04 மாதிரிகளுக்குரிய 17 டோனர்கள் மற்றும் Riso Master Roll என்பன | எதிர்காலத்தில் இவ்வாறான உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது கூடிய கவனத்தினைச் செலுத்தி வருடாந்த தேவைப்பாட்டின் பிரகாரம் கொள்வனவு | இருப்பு தொடர்பாக காணப்படும் கட்டுப்பாட்டு முறைமை மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அசைவற்ற இருப்பாக அவதானிக்கப்பட்டன. அவ்வாறே ரூபா 477,522 ஆன எழுதுகருவிகள் உட்பட 10 இருப்பு வகைகள் மெதுவாக அசையும் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இருப்பு தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறை செயற்தினானதல்ல என அவதானிக்கப்பட்டது | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் மூலதன தன்மையிலான சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 14 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்க வில்லை. | அத்தேவைப்பாட்டை நிறுவகத்தில் மிக விரைவாக செயற்படுத்து வதற்கு தேவையற்ற பெறுகை செயற்பாடுகளாக பின்னர் இனங்காணப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டில் அச்செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | முன்னுரிமையின் பிரகாரம் பெறுகை திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த நிறுவகத்தின் நுழைவு வீதியை விரிவுபடுத்துதல் மற்றும் வாகன கராஜினை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,329,975 பெறுமதியான ஒப்பந்தம் 2019 மே 27 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் வேலைத் திணைக்களத்தில் காணப்பட்ட நிர்வாக சிக்கல் ஒன்று காரணமாக ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பீடு தாமதமாக இருந்ததுடன் எஞ்சிய வேலைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மிக விரைவில் இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு நிறுவகம் வேலைகளை மேற்கொள்கின்றன. | நிர்மாண ஒப்பந்தங்கள் சரியான காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படல் வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட செலவினங்களையும் உள்ள வாறான செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 02 விடயங்களில் 38 சதவீதம் முதல் 296 சதவீதம் வரையான அதிகரிப்பொன்றும் 15 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான குறைவொன்றும் அவதானிக்கப்பட்டது. | வெவ்வேறு செயற்பாடுகள் வெவ்வேறு குறிகாட்டிகள் மீது தங்கியிருப்பதால் அந்நடவடிக்கைகளை 100% சரியாக எதிர்வுகூறுவது சிரமமாகும். இதனால் பாதீடு செய்யப்பட்ட செலவினங் களையும் உள்ள வாறான செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது உள்ளவாறான செலவினங்களில் அதிகரிப்பொன்று அல்லது குறைவொன்று காணப்படுகின்றது. | நடைமுறை ரீதியான பாதீடொன்றை தயாரித்து அதற்கு இணங்க செயற்பட வேண்டும். |